Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை.

மலர் I.] 1941-ம௵ மே௴ 3௳, சனிக்கிழமை. [இதழ் ந. 7.

## வாரச் செய்திக் குறிப்புகள்.

### 1. ஜெர்மனியிலும், பிரிட்டனிலும், இதர இடங்களிலும், ஆகாய விமானப் போர்.

வழக்கம் போல, சென்றவாரத்தில், ஜெர்மனியின் முக்கியமான நகரங்களின்மேல், பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை வெடிகுண்டு மழை பொழிந்தது. ஜெர்மனியின் கடற்படை மூல ஸ்தானங்களில் முக்கியமானதான கீல் என்ற பட்டணத்தை, பிரிட்டிஷ் வெடிகுண்டு படை மும்முரமாகத் தாக்கியது. சென்ற வெள்ளிக்கிழமை (எப்ரல்௴ 25-ந் தேதி) கீல் துறைமுகமும், கப்பல் கட்டும் சாலைகளும் தாக்கப்பட்டதனால், பல இடங்களில் நெருப்புப் பற்றிக்கொண்டு எரிந்தது. கீல் பட்டணத்தைத் தாக்கியது இதோடு நாற்பதாவது தடவையாகும்.

வட மேற்கு ஜெர்மனியில், கீல் பட்டணமல்லாமல், இன்னும் பல கடற்படை மூலஸ்தானங்கள் தாக்கபபட்டன. வில்ஹம்ஷேவன், பிரெமர்ஹேவன், எம்டன், லூபெக், பிரீட்ரிக்ஸ்டாட் முதலிய இடங்களின்மேல் வெடிகுண்டுகள் போடப்பட்டன. இதனால், ஜெர்மனிக்குச் சேதம் விளைந்திருக்கிறதென்பதை, ஜெர்மன் 'ரேடியோ' ஒத்துக்கொண்டிருக்கிறது. பர்லின் மேலும் வெடி குண்டுகள் வீசப்பட்டன.

வட மேற்குக் கடற்கரைப் பட்டணமாகிய ஹாம்பர்க் சென்ற சனிக்கிழமையன்று தாக்கப்பட்டது. இது ஜெர்மனியின் இரண்டாவது பெரியபட்டணம்; ஜெர்மனியின் பெரிய கடற்கரைப் பட்டணங்களில் முதன்மையானது. இதைத் தாக்கிய இரவு நிலவில்லாமல் இருட்டாய் இருந்தது. வெடி குண்டுகள் குறிப்பிட்ட லட்சியங்களின்மேல் விழுந்து பெருத்த சேதங்களை உண்டாக்கியிருக்கவேண்டும். ஏனென்றால், மேலிருந்து பார்த்த பிரிட்டிஷ் விமான ஓட்டிகள், இந்தக் கடுமையான தாக்குதலைப்பற்றிச் சில விவரங்கள் கூறியிருக்கிறார்கள். ஹாம்பர்க்கில் வெடிகுண்டுகள் வெடித்த காட்சி, ஒரு பெரிய எரிமலை திடீரென்று பிரம்மாண்டமான நெருப்பைக் கக்கினால் எப்படியிருக்குமோ அப்படியிருந்தது என்று ஒரு பிரிட்டிஷ் விமான ஓட்டி கூறுகிறார். நெருப்பின் விஸ்தீரணம் அரை மைல் சுற்றளவிருந்ததாம். பத்துமைலுக்கப்பாலிருந்த வேறொரு விமான ஓட்டி, வெடி குண்டு பயங்கரமாக வெடித்த காட்சியைப்பார்த்ததாகக் கூறுகிறார். ஹாம்பர்க் நகரத்தின் பல பாகங்களில் நெருப்பு தெரிந்ததென்றும், பின்பு கருப்புப் புகையினால் சில பாகங்கள் மறைக்கப்பட்டனவென்றும், பிரெமர்ஹேவன் மேல் போட்ட வெடிகுண்டுகளினால் கட்டடங்கள் அப்படியே மேலே எழும்பினவென்றும் தெரிகிறது. கக்ஷேவன், லூஹேவர், என்ற கப்பற்சாலைகள்மேலும் வெடிகுண்டுகள் போடப்பட்டன.

கலோன் என்ற ஜெர்மன் மேற்குப் பட்டணம் தாக்கப்பட்டது. கலோனுக்கு மேற்கிலுள்ள ஒரு தொழிற்சாலையும், கலோனுக்கு அருகிலுள்ள ஒரு ராணுவ முகாமும் வெடிகுண்டுகளுக்கு இரையாயின. கலோன், எம்டன், என்ற இரண்டு பட்டணங்களையும், பிரிட்டிஷ் விமானங்கள் பகற்காலத்தில் தாக்கின. கலோன் தொழிற்சாலை மேல் வெடி குண்டுகள் விழுந்ததை ஜெர்மனி ஒப்புக்கொள்ளுகிறது. இதைப் பற்றிய ஜெர்மன் அறிக்கை கூறுவதாவது :—" ஒரு தொழிற்சாலையில், வெடி குண்டுகள் விழுந்ததால், சிலர் உயிரிழந்தார்கள்; சிலர் காயமடைந்தார்கள்; கட்டடங்களுக்குக் கொஞ்சம் பழுது ஏற்பட்டது ஆனால் தொழிற்சாலை வேலைக்குத் தடை ஒன்றும் ஏற்படவில்லை. இந்த அறிக்கையில், ஜெர்மனி ஒப்புக்கொண்ட விஷயத்திலிருந்தே, பிரிட்டிஷ் தாக்குதலின் வெற்றி புலப்படுகிறதென்று லண்டனில் கூறுகிறார்கள்.

சென்ற வாரம், ஜெர்மனியின் ஆதிக்கத்துக்குட்பட்ட பல நாடுகளை, பிரிட்டிஷ் ஆகாய விமானப் படை தாக்கியிருக்கிறது. நார்வேயின் கரையோரத்தில் சில வெடிகுண்டுகள் போடப்பட்டன. எதிரியின் கப்பலொன்று நெருப்புக்கு இரையாக்கப்பட்டது. கரைக்கு அருகாமையிலுள்ள தீவில் இருந்த 'ரேடியோ' நிலையத்தின் மேல் வெடி குண்டு போடப்பட்டதால், கட்டடம் இடிந்து விழுந்துவிட்டது. வடக்கு பிரான்சில், ஜெர்மன் விமானச்சாலைகளை, பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கி, ஜெர்மன் போர் விமானங்களை யந்திர பீரங்கிகளால் சுட்டன. இந்த பகற் சண்டையில் ஒரு பிரிட்டிஷ் விமானம் இழக்கப்பட்டது.

நார்வே, ஹாலந்து, பெல்ஜியம், பிரான்சு—இந்த நாடுகளின் கரையோரங்கள் மேல். இரவில், பிரிட்டிஷ் விமானங்கள் வெடி குண்டுகளைப் போட்டன. இந்த முயற்சியில், இரண்டு பிரிட்டிஷ் விமானங்கள் திரும்பி வரவில்லை.

நெதர்லாந்து பிரதேசத்தில், நியூவி என்ற நீர்ப்பாதைக்கு ஒரு மைலுக்குமேல் உள்ளபாகத்தில் இருந்த 16,000 டன் 'சப்ளை' கப்பல், பொழுது விடிந்தவுடன் தாக்கப்பட்டது. 25 அடி உயரத்துக்கு மேலிருந்து போடப்பட்ட இரண்டு வெடிகுண்டுகள் கப்பலைத்தாக்கிச் சின்னாபின்னமாக்கிவிட்டன. கருப்புப்புகை மேலே கிளம்பியது; கப்பலின் சிப்பந்திகள் கால்வாயில் முழுகினார்கள்; சில சிறுகப்பல்கள் வெடிகுண்டுகளினாலும், யந்திர பீரங்கிகளாலும் தாக்கப்பட்டன. ஹாலந்து கரையோரத்தில் இருந்த ஒரு ராணுவமுகாமின் மேல் வெடிகுண்டுகள் போடப்பட்டன.

நெதர்லாந்திலுள்ள இச்மியுடென் என்ற இடத்திலுள்ள இரும்பு, எஃகு தொழிற்சாலைகள் தாக்கப்பட்டன. இயந்திரசாலைகள்மேலும், இயந்திர அடுப்புகள்மேலும், பல வெடிகுண்டுகள் விழுந்தது நன்றாகத்தெரிந்தது. வேறு சில வெடிகுண்டுகள் கட்டடத்தின் மேலும், நூதன பண்டகசாலையின்மேலும் விழுந்தன. பிரிட்டனுக்குத் திரும்புகையில், மணல் மேடுகளில் ஒளிந்து கொள்ள முயற்சித்த பகைவர்களுடைய துருப்புகள் யந்திர பீரங்கிகளால் சுடப்பட்டன.

வடக்கு பிரான்சில், ஒரு ஜெர்மன் ஆகாய விமானச்சாலையைத் திடீரென்று பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கின. 100 அடி உயரத்திலிருந்து, மெசர்ஷிமிட்ஸ் என்ற ஜெர்மன் விமானங்கள் பல யந்திர பீரங்கிகளால் சுடப்பட்டன. தெற்குக் கரையோரத்தில் ஒரு ஜெர்மன் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது.

ஹாலந்திலுள்ள ராட்டர்டம் என்ற பட்டணத்திலுள்ள எண்ணெய்க் களஞ்சியங்கள்மேல் வெடிகுண்டுகள் போடப்பட்டன. ராட்டர்டமுக்குப் போகும் கால்வாயில் இருந்த கப்பல்கள் பல வெடிகுண்டுகள் பட்டு தண்ணீரில் முழுகிவிட்டன. மூன்று 'கான்வாய்' கப்பல்களால் சூழப்பட்ட இரண்டு 'சப்ளை' கப்பல்கள்மேல் விழும்படியாக வெடிகுண்டுகள் போடப்பட்டன. இந்தக் கப்பல்கள் ஹெலிகோலாந்

தெற்குச் சீனுவின் கடற்கரை யோரத்தை ஜப்பான் பிடித்ததற்கு ஒரு காரணம் சொல்லப்படுகிறது. அந்தப் பிரதேசத்தை, கடற்படை ஆகாய விமானப் படை, இவைகளின் மூலஸ்தானமாக உபயோகித்து, தாய்லாநதையும், பர்மாவையும், முதலில் தாக்கி, பிறகு சிங்கப்பூரைத் தாக்க ஜப்பான் நினைத்திருக்கிறது என்று சீன தேசத்து ராணுவத் தலைமை உத்தியோகஸ்தர், லெப்டினன்ட்-ஜெனரல் சூவோ பீகெங் கூறுகிருர். ரஷ்ய-ஜப்பான் ஒப்பந்தத்திற்குப் பிறகு, இதுதான் முதலில் நடக்கும் காரியம் என்று அவர் கூறுகிருர்.

ஆஸ்திரேலியாவின் மேல் படையெடுப்பது ஜப்பானின் நோக்கமல்லவென்று, ஆஸ்திரேலியாவில் உள்ள ஜப்பானிய ஸ்தானீகர், மிஸ்டர் காவே, கூறியிருக்கிருர். இரண்டு நாடுகளுக்கும் வியாபாரத் தொடர்புகள் அதிகப்படவேண்டுமென்று ஜப்பான் விரும்புவதாக அவர் அறிவித்தார். ஆஸ்திரேலியாவின் அயல் நாட்டு மந்திரி, சர் பிரடெரிக் ஸ்டுவர்ட், இதைக் குறித்துப் பேசும்போது, பிரிட்டனேடுதான் ஆஸ்திரேலியா நேசப்பான்மையுடன் இருந்து யுத்தத்தில் உதவி செய்யுமென்றும், ஜெர்மனி, இத்தாலியுடன் ஒப்பந்தம் செய்துகொண்ட ஜப்பான் இதை விளக்கமாக அறிந்துகொள்ளவேண்டுமென்றும் கூறினுர்.

ஜப்பானிய ஆகாய விமானங்கள் சீனுவின் பல பாகங்களின்மேல் வெடிகுண்டுகளைப் போட்டன. ஒரு சீனத் தீவில் ஜப்பானியத் துருப்புகள் இறங்கியிருக்கின்றன.

### 8. விஷி.

விஷி அரசாங்கத்துக்கு அமெரிக்கா ஒரு எச்சரிக்கை செய்திருக்கிறது. அமெரிக்காவிலிருந்து உணவுப் பொருள்கள் வரவேண்டுமென்ற எண்ணம் இருந்தால், இந்த யுத்தத்தில் விஷி நடுநிலைமை வகிக்க வேண்டுமென்றும், பிரிட்டனைப் பகைத்துக்கொள்ளக் கூடாதென்றும், அமெரிக்க ஸ்தானீகர், அட்மிரல் லீஹி, பிரெஞ்சு முதன் மந்திரியாகிய மார்ஷல் பிடெயினுக்குக் கூறியதாகத் தெரிகிறது.

### 9. ஜெர்மனியின் ஆதிக்கத்திலுள்ள நாடுகள்.

யூகோஸ்லாவியாவில், ஜெர்மானியர்கள் கொடுங்கோலாட்சி புரிகிருர்கள். நாட்டு மக்கள் மிருகங்களை விடக் கேவலமாக நடத்தப்படுகிருர்கள். ஜெர்மானியர்கள் யூகோவின் தலைநகரான பெல்கிரேடில் உள்ள கடைகளைக் கொள்ளையடித்தார்கள். மோடார் லாரிகளில் கொள்ளையடித்த சாமான்களை ஏற்றிக் கொண்டும் சென்றுர்கள். ஜெர்மன் விமானங்கள் தாக்கியதனுல் இடிந்த கட்டடங்களின் உடைந்த கற்கள், மரங்கள் முதலியவற்றைச் சுத்தம் செய்யும்படி, 16 முதல் 60 வயது வரையிலுள்ள பெல்கிரேடு மக்களைக் கட்டாயப்படுத்தி ஜெர்மன் துருப்புகள் வேலை வாங்குகின்றன. பெல்கிரேடில் இரவு ஏழு மணிக்குப்பிறகு யாரும் வெளியில் போகக்கூடாது. போனல் உடனே சுடப்படுவார்கள். ஒரு 'தினுர்' விற்ற முட்டை இப்போது 20 'தினுர்' (யூகோநாணயம்) விற்கிறது.

முன்பு ஹாலந்தில் நியாயமந்திரியாயிருந்த மிஸ்டர் சார்லஸ் கோசிலிங் புச்சென்வால்டு கைதிக் கொட்டடியில் இறந்துபோனுர். ஹாலந்தை ஜெர்மனி தாக்கிய பாது, மிஸ்டர் கோசிலிங் ராணுவத் தலைமையதிகாரிகளில் ஒருவராயிருந்தார்.

### 10. நடுநிலைமை நாடுகள்.

ரஷ்யா தன்னுடைய மேற்கெல்லை முழுவதையும் பலப்படுத்திக்கொண்டுவருகிறது. ஜெர்மனிக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் உள்ள போலந்து எல்லையில், ஜெர்மன் ராணுவபலம் ஒன்ருகச் சேர்க்கப்பட்டுவருவதைக்கண்டு, ரஷ்ய எல்லையில் முன்ஜாக்கிரதையான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

போருக்கு ஆயத்தமான ஜெர்மன் துருப்புகள், விமானப்படைகள், மோடார் படைகள் இவைகளில் பாதிக்குமேல் ரஷ்யா எல்லையருகில் சேர்க்கப்பட்டிருக்கின்றன, இப்போது இங்கிலாந்துக்கு ஜெர்மனியால் ஏற்படும் அபாயத்தைவிட, ரஷ்யாவுக்கு ஜெர்மனியால் ஏற்படும் அபாயம் 50 மடங்கு அதிகம் என்று ஒரு கிழக்கு ஐரோப்பா யுத்த நிபுணர், ரஷ்யாவின் தலைநகரான மாஸ்கோவில் கூறியிருக்கிருர்.

சென்ற சனிக்கிழமை, துருக்கி ஜெர்மனியுடன் ஒரு வியாபார ஒப்பந்தம் செய்துகொண்டது. அந்த ஒப்பந்தத்தின்படி, துருக்கி ஜெர்மனிக்கு புகையிலை விற்கவேண்டுமென்றும், ஜெர்மனி துருக்கிக்கு யந்திரங்களும், யந்திரபாகங்களும் விற்கவேண்டுமென்றும் விதிக்கப்பட்டிருக்கிறது.

அயர்லாந்து, தன் நடுநிலைமையை, டீ, மாவு, பெட்ரோல், நிலக்கரி ஆகிய எந்த பொருளுக்கும் விற்காதென்றும், ஆனுல் எந்த சமயத்திலாவது யுத்தம் அயர்லாந்துக்குள் வந்தால், அயர்லாந்து தன்னுடைய சுதந்தரத்தைக் காப்பாற்ற முழு ஆயத்தமாயிருக்கிறதென்றும், மிஸ்டர் சீன் லெமாஸ், அயர்லாந்தின் 'சப்ளை' மந்திரி, டப்லினில் நடந்த கூட்டத்தில் பேசியிருக்கிருர்.

பிரிட்டிஷ் துருப்புகள் ஈராக்கில் இருப்பதால், அருகாமையில் ஈரானில் உள்ள மக்கள் மன அமைதியுடன் இருக்கிருர்கள் என்று தெரிகிறது.


ரஷ்யாவின் மூலமாக எந்த யுத்த சாமான்களும் பிற நாடுகளுக்குச் செல்வதற்கு அனுமதிக்க முடியாது என்று, அயல் நாட்டு வியாபாரக் 'கமிசார்' (மந்திரி) மிக்கோயான் என்பவர் உத்தரவிட்டிருக்கிருர். வெடிகுண்டு மருந்துகள், ஆகாய விமானப் பாகங்கள், யந்திர ஆயுதங்கள், பாஷாணம் முதலியவை இந்த உத்தரவின்கீழ் வருகின்றன. ஜப்பானிய ராணுவ வட்டாரங்கள் இந்த உத்தரவைக் குறித்து, தம்முடைய அதிருப்தியை வெளியிட்டிருக்கின்றன. ஏனென்றுல், சமீபத்தில் கையெழுத்திடப்பட்ட ஜெர்மனி—ஜப்பான் ஒப்பந்தத்தின்படி ஜப்பான் கடற்படை தொகுதிகளுக்குப் பதிலாக, ஜெர்மன் விமானங்கள் ஜப்பானுக்குக் கொடுக்கப்படும்; இந்த உத்தரவு அந்த ஒப்பந்தத்தைப் பிரயோசனமில்லாமல் செய்துவிட்டது. ஆனுல் சீனுவுக்குச் செல்லும் யுத்த சாமான்களை ரஷ்யாவின் உத்தரவு பாதிக்காது. சீனுவுக்கு அயல் நாடுகள் உதவிசெய்வது நிறுத்தப்படவேண்டும். இல்லாவிட்டால் ஜப்பான் தன்னுடைய லட்சியத்தையடைய உறுதியான, தீவிர முயற்சிகள் செய்யும் என்று "கோகுமின் ஷிம்பன்" என்ற ஜப்பானிய பத்திரிகை கூறுகிறது. ஜப்பான் தெற்கு நோக்கி இனிமேல் போகாதென்றும், ரஷ்யாவின் நடுநிலைமையை உபயோகித்து தெற்கு நோக்கித் தாக்குதலை நிறுத்திவிடுமென்றும் அப்பத்திரிகை கூறுகிறது.

பிரிட்டிஷ் துருப்புகள் பஸ்ராவில் வந்திறங்கியிருக்கின்றன வென்றும், மேலும் அதிகமான பிரிட்டிஷ் துருப்புகள் வரப்போகின்றனவென்று பிரிட்டிஷ் அரசாங்கம், ஈராக் அரசாங்கத்துக்கு அறிவித்திருக்கிறதென்றும் ஈராக் அரசாங்கம் அதை ஆட்சேபித்திருக்கிறதென்றும், ஈராக்கின் சேனை நடந்துகொள்வது பிரிட்டிஷ் சேனைக்குப் பயங்காட்டும் மாதிரியாக இருக்கிறதென்றும், ஈராக் சேனையை வேறிடத்துக்கு மாற்றும்படி பிரிட்டிஷ் அரசாங்கம் கேட்டிருக்கிறதென்றும் தெரிகிறது.

---

[8-ம் பக்கம் தொடர்ச்சி.


"நான் மனச்சாந்தி பெற்றிருக்கிறேன். என்னுடைய உள்ளம் ஆனந்தமயமாய் இருக்கிறது. கஷ்டங்களெல்லாம் உலகத்தைப் பரிசுத்தப்படுத்துவதற்குத்தான் வருகின்றன. சுயநலமும், பேராசையும், பெருமையும், பயமும், நம்மிடத்தில் குடிகொண்டிருந்தன. மனக்கஷ்டத்தினுல் உண்டாகும் பரிசுத்தத்தினுல்தான் அவை போகும். இது வெறும் வாய் வேதாந்தமல்ல. என்னுடைய அனுபவத்திலிருந்து நான் சொல்லுகிறேன். மனோவேதனை ஆத்மாவைப் பலப்படுத்தவேண்டும். மனோவேதனைப் படுவதில் மாத்திரம் யாதொரு புண்ணியமுமில்லை. பின்னுல், இதைவிட நல்ல உலகத்துக்காகப் போராடுவதற்கு அது ஒரு வழிகாட்டியாயிருக்கவேண்டும். என் மனதில் தோன்றும் எண்ணங்களை வெளிப்படையாகக் கூறினேன். ஒருவரிடத்தில் பேசிக்கொண்டே யிருக்கும்போது, நாம் நம்பும் உண்மைகளைக் கண்டுபிடிக்கிருேம். அதுபோல, உனக்கு கடிதம் எழுதிக்கொண்டே யிருக்கும்போது, நான் கண்ட உண்மைகளை உனக்குச் சொன்னேன்."




Reg. No. 49/2 Copies 9700

Heliozinco., Survey Office, Madras. 1941

பிரிட்டிஷ் ஆகாய விமானத்தால் சுடப்பட்ட விரோதி 'டாங்கர்' யுத்தக்கப்பல் கடலில் மூழ்கும் காட்சி,



இரவும் பகலும் பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் தரைமீதும் கடல்மீதும் வேவுபார்த்து வருகின்றன.

# அட்லாண்டிக் சமுத்திர யுத்தம்.

## அமெரிக்க உதவி அதிகரிக்கிறது.

### பிரிட்டிஷ் கப்பற்படையின் பிரம்மாண்டமான வேலே.

சென்றவாரம், 'ரேடியோ 'வில், தென்னுப்பிரிகாவின் பிரபல அரசியல் நிபுணர், ஜெனரல் ஸ்மட்ஸ் கேப் டெளனிலிருந்து பேசினுர். தம்முடைய பேச்சில், அமெரிக்காவின் யுத்த உதவியின் முக்கியத்தைப் பற்றி, அவர் விளக்கமாகக் கூறினுர். அவர் கூறியதாவது :—" நமக்கு ஒரு புதிய நேசம் கிடைத்தது. எல்லாரையும்விட, உலகத்திலேயே மிகப்பலமுடையதும், மிக அவசியமானதுமான அமெரிக்காவின் நேசம் நமக்குக் கிடைத்ததால், இந்த யுத்தத்தின் முடிவை உறுதியான நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம். பலமே உருவாயிருக்கும் அமெரிக்க ராட்சதன் தன்னுடைய தூக்கத்திலிருந்து எழுந்துவிட்டான். ஹிட்லர் அவனைத் தூக்கத்திலிருந்து எழுப்பிவிட்டதற்கு நாம் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். மிஸ்டர் ரூஸ்வெல்ட் மீண்டும் அமெரிக்காவுக்குப் பிரசிடெண்டாகத் தேர்ந்தெடுத்த சம்பவம், பிரிட்டனுக்கு உதவிசெய்வதற்காக வாடகை கடன் சட்டம் நிறைவேறியது, நேச தேசத்தார்களோடு அமெரிக்காவின் மக்கள் அசையா மனவுறுதியுடன் சேர்ந்தது ஆகிய இவைகளெல்லாம் ஹிட்லருடைய முடிவுகால அறிகுறிகளாகும். இன்னும், அமெரிக்கா இந்த யுத்தத்தில் அதிகதூரம் ஈடுபடுவது நிச்சயம்.

அமெரிக்காவின் உதவியைப் பிரயோசனமில்லாமல் செய்ய ஹிட்லர் எவ்வளவோ முயற்சிசெய்தும் வெற்றிபெற முடியவில்லை. பிரிட்டிஷ் கப்பற் படையை மத்தியதரைக்கடலிலேயே சிறைப்படுத்துவது, அட்லாண்டிக் கடலில் பிரிட்டனுக்கு உதவி கொண்டுவரும் கப்பல்களை அழிப்பது—இந்த இரண்டு நோக்கங்களில் ஜெர்மனி தன்னுடைய கவனத்தைச் செலுத்திவருகிறது. பால்கன் பிரதேசத்தில் ஜெர்மனி பெற்ற வெற்றிகள் இதுவரைக்கும், இந்தக் காரியத்துக்குப் பயன்படவில்லை. இனியும் பயன்படப்போவது மில்லை. நைல் நதிக் கரையினுள்ள பிரிட்டிஷ் துருப்புகள், லிபியாவிலிருந்து சூயஸ் கால்வாய்க்கு ஜெர்மன் துருப்புகள் வருவதற்குப் பெருந்தடையாயிருக்கின்றன. இத்தாலியின் கிழக்கு ஆப்பிரிக்காவைப் பிடித்ததினால், செங்கடல் துறைமுகப் பட்டணமாகிய மசாவா, பிரிட்டனுக்கும் பெரிதும் உபயோகமாயிருக்கிறது. யுத்த ஆயுதங்கள், உணவுப் பொருள்கள் முதலியன மத்திய கிழக்குப் பிரதேசத்துக்குக் கொண்டுவரும் அமெரிக்கக் கப்பல்கள் செங்கடலுக்கு வந்து, பிரிட்டனுக்கு பேருதவி செய்கின்றன.

ஆனால், அமெரிக்காவில் உள்ள பிரிட்டிஷ் ஸ்தானீகர், லார்டு ஹாலிபாக்ஸ் கூறியபடி, அட்லாண்டிக் கடல் சண்டைதான், இந்த யுத்தத்தின் முடிவுகாட்டும் போரரங்கமாகும் இங்குதான் பிரிட்டிஷ் கப்பல்கள் மேல், ஹிட்லர் மூன்றுவித தாக்குதல்களைச் செய்வது. யூ-கப்பல்கள் என்ற 'சப்மரீன்'கள் மூலமாகவும், கடல் மட்டத்தில் சண்டை செய்யும் போர்க் கப்பல்கள் மூலமாகவும், வெடிகுண்டுகள் போடும் ஆகாய விமானங்கள் மூலமாகவும், பிரிட்டிஷ் கப்பல்களை ஜெர்மனி தாக்குகிறது. அட்லாண்டிக் கடல் சண்டையின் நிலைமையை, பிரிட்டிஷ் முதன் மந்திரி மிஸ்டர் சர்ச்சில், விளக்கிக்காட்டியிருக்கிறார். இருதிறத்தார்களும் கடுமையாகப் போராடுகிறார்கள். இரவும் பகலும் விசாலமான அட்லாண்டிக் கடற் பிரதேசத்தில் மும்முரமான சண்டை நடக்கிறது. பல கப்பல்கள் முழுகடிக்கப்படுகின்றன. சண்டை அநேக மாதங்களாகத் தொடர்ந்து நடக்கும். பிரிட்டிஷ் வர்த்தகக் கப்பற்படை, பிரிட்டிஷ் யுத்தக் கப்பற்படை, பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை—இவைகள் தியாகமும், சகிப்புத்தன்மையும் இனிமேல் அதிகமாகக் காட்டவேண்டியிருக்கும்.

### கப்பல் நிலைமை: லாப நஷ்டம்.

பிரிட்டன் சுமார் 40 லட்சம் டன் கப்பல்களை இந்தச் சண்டையில் இழந்திருக்கிறது. அதற்குப் பதிலாக, புதிதாகக் கட்டப்பட்டதும், அயல் நாட்டார்களிடம் வாங்கியதும் சேர்ந்து, 30 லட்சம் டன் கப்பல்கள் கிடைத்திருக்கின்றன. இந்த 10 லட்சம் டன் கப்பல் நஷ்டம் இப்போது கொஞ்சமாயிருந்தாலும், போகப்போக இது அதிகரிக்கலாம்; 1942-ம்ஞூ யுத்த முயற்சி ஒரு முக்கியமான அளவுக்கு இதனால் சுருங்கக்கூடும். ஆனால் நிலைமையைச் சீர்திருத்த அநேக ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அவையாவன:—(1) அதிகமாக வர்த்தகக் கப்பல்கள் கட்டுதல்; (2) துறைமுகங்களில் சாமான் இறக்கியதும் துரிதமாக திரும்பிப்போகும்படிச் செய்தல்; (3) அமெரிக்காவிலிருந்து கப்பல்கள் அதிகமாகக் கிடைக்கும்படிசெய்தல்; (4) 'சப்மரீன்'களை அழிப்பதற்குச் செய்துவரும் முயற்சிகளைத் தீவிரமாக அதிகப்படுத்துதல். பிரிட்டனைப் பொறுத்தவரையில், கப்பல்கட்டும் வேலைகள், பிரிட்டிஷ் கப்பல்கட்டும் சாலைகளில் துரிதமாக நடந்துவருகின்றன. பிரிட்டிஷ் துறைமுகங்களில் சீக்கிரமாகச் சாமான்களை இறக்கி, கப்பல்களைத் திருப்பியனுப்புவதற்காக, புதிய தொழிற் சட்டங்கள் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அமெரிக்காவைப் பொறுத்தவரையில், இப்போது 25 லட்சம் டன் கப்பல்களை உடனே பிரிட்டனுக்குக் கொடுப்பதற்கு, அமெரிக்கா தயாராயிருக்கிறது. பிரிட்டனுக்காக 950 வர்த்தகக் கப்பல்களும், 913 யுத்தக் கப்பல்களும் அமெரிக்கா இப்போது செய்துகொண்டு வருகிறது. 1918-ம்ஞூத்தில் ஜெர்மனி முறிந்து விழுந்து, யுத்தத்தில் தோல்வியடைந்ததற்குக் காரணம், அமெரிக்காவின் கப்பல் பலம்தான். இப்போது அமெரிக்கா பிரம்மாண்டமான கப்பல் கட்டும் முயற்சியில் இறங்கியிருக்கிறது. இதே முயற்சியினால், ஜெர்மனிக்கு முன்பு நேர்ந்த தோல்வி மறுபடியும் சம்பவிக்கும் என்பதில் சந்தேகமில்லை. டென்மார்க், இத்தாலி, ஜெர்மனி, இவைகளின் கப்பல்கள் அமெரிக்கத் துறைமுகங்களில் தங்கியிருந்தன. அவைகளை அகில தேசிய சட்டத்தின்கீழ் அமெரிக்கா கைப்பற்றிக்கொண்டது. இவைகளும், இதர அயல் நாட்டுக் கப்பல்களும் பிரிட்டனுக்குக் கொடுக்கப்படலாம்.

மிஸ்டர் சர்ச்சில், சப்மரீன் எதிர்ப்பு ஏற்பாடுகளைப் பற்றிக்கூறினர். இப்போது அட்லாண்டிக் கடலில், அதிகமான ஜெர்மன் சப்மரீன்கள் நடமாடிக்கொண்டிருக்கின்றன; அதற்குத் தகுந்த ஏற்பாடுகளை பிரிட்டன் செய்திருக்கிறது. 50 ஜெர்மன் சப்மரீன் ஆபீசர்களும், 400 கீழ்தர ஆபீசர்களும், பிரிட்டனில் யுத்தக் கைதிகளாக இருக்கின்றார்கள்.

பிரிட்டிஷ் கப்பற்படை பிரம்மாண்டமான வேலை செய்து கொண்டு வருகிறது. சென்ற யுத்தத்தில், ஐந்து நேசதேச நாடுகளின் கப்பற்படைகள் செய்த வேலையை, பிரிட்டிஷ் கப்பற் படை இப்போது செய்து வருகிறது. இதனால் ஏற்பட்ட தளர்ச்சியைச் சரிப்படுத்த அமெரிக்கா நல்ல உதவி செய்து வருகிறது. துணை உதவிக்காக உபயோகப்படும் பத்து கப்பல்கள் (ஒவ்வொன்றும் 2,000 டன் எடையுடையது) பிரிட்டனுக்குக் கொடுக்கப்பட்டன. சென்ற வருஷத்தில், பழைய யுத்தக் கப்பல்கள் 50 பிரிட்டனுக்குக் கொடுக்கப்பட்டன; அவைகளுக்குப் பதிலாக அட்லாண்டிக் கடலில் எட்டு பிரிட்டிஷ் முக்கிய ஸ்தானங்களை அமெரிக்கா வாடகைக்குப் பெற்றது. இந்தப் பழைய கப்பல்களை, பிரிட்டன் 'சப்ளை' கப்பல்களுக்குப் பாதுகாப்பாக உபயோகப்படுத்துகிறது.

அட்லாண்டிக் கடலில், பிரிட்டனுக்கு இருந்த முக்கிய ஸ்தலங்களை அமெரிக்கா வாடகைக்கு வைத்துக்கொண்டது ஒரு விசேஷமான காரியம். அதன் மூலம், அட்லாண்டிக் கடலில் ஹிட்லர் வருவதை அமெரிக்கா தடுக்கும் என்ற விஷயம் உலகத்திற்கு விளக்கப்பட்டது. இந்த ஸ்தலங்களைப் பெற்றதினால், அமெரிக்காவுக்குப் புதிய பலம் ஏற்பட்டது. அந்தப் பலத்தின் அளவை யுத்த நிபுணர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். ஐந்து புதிய யுத்தக் கப்பல்கள், அல்லது 2,500 ஆகாய விமானங்கள், அல்லது ஒரு பெரிய பட்டாளம், இருந்தால் எவ்வளவு பலமோ, அவ்வளவு பலம் இந்த முக்கிய ஸ்தலங்களைப் பெற்றதினால் அமெரிக்காவுக்குக் கிடைத்தது. அதைவிட அதிகமான பலம் உலக அபிப்பிராயம் அமெரிக்காவின் செய்கையை வரவேற்றதுதான்.

### எட்டு முக்கிய ஸ்தலங்கள்.

இந்தக் கடற் படை, விமானப் படை முக்கிய ஸ்தலங்கள் எட்டு இடங்களில் இருக்கின்றன. அவையாவன:—நியூ பவுண்டுலாண்டு, பர்மியூடா, பகாமாஸ், ஜமேகா, அன்டிகுவா, செயிண்ட்லூசியா, ட்ரினிடாட், பிரிட்டிஷ் கயானா. நியூபவுண்ட்லாண்டின் துறைமுகங்கள் நிறைந்த தெற்குக் கரை, பனிக்கட்டி யில்லாமல், வருஷம் முழுவதும் கப்பல் போக்கு வரத்துக்குச் சௌகரியமானது. இந்தக் கரையோரத்திலும், அவலான் தீபகற்பத்திலும், யுத்தக்கப்பல்கள், சப்மரீன்கள், பறக்கும் கப்பல்கள் இவைகளை ஒருங்கு சேர்த்து வைக்கலாம். பர்மியூடாவில், கடல் விமானங்கள், யுத்தக்கப்பல்கள், சப்மரீன்கள் முதலியவை வைத்திருக்கலாம். பகாமாஸை பாதுகாப்பு விமானங்கள் தங்குமிடமாக உபயோகிக்கலாம். இவைகளும், இதர கடற்படை ஸ்தலங்களும், கரிபியின் கடலின் இரண்டு வழிகளை அமெரிக்காவின் முழு ஆதிக்கத்தில் கொண்டு வந்திருக்கின்றன. ஜமேகா, கிங்ஸ்டன் என்ற இடத்தில் நல்ல துறைமுகத்தை உடையதாயிருக்கிறது. அதில், தணிக்கை பார்க்கும் விமானங்கள், சப்மரீன்கள், யுத்தக்கப்பல்கள் முதலியன தங்குவதற்குச் சௌகரியங்கள் உண்டு. செயிண்ட்லூசியா, அன்டிகுவா, விண்ட்வார்ட் தீவு, ஆகிய இடங்கள் சப்மரீன்களுக்கும், தணிக்கை விமானங்களுக்கும் மத்திய ஸ்தானமாய் இருக்க உபயோகப்படும். ட்ரினிடாட், கரிபியன் கடலுக்குச் செல்லும் தெற்கு வாயற்படியைப் பூட்டும் ஸ்தானத்தில் இருக்கிறது. அது கப்பற்படைக்கும், தூரத்தணிக்கை பார்க்கும் கடல் விமானங்களுக்கும் தரை விமானங்களுக்கும், தங்குமிடமாக உபயோகமாகும். தென் அமெரிக்காவிலுள்ள பிரிட்டிஷ் கயானா ஆகாய விமானங்களுக்கும், லேசான கப்பல்களுக்கும் தங்குமிடமாகும்.

அமெரிக்காவின் கடற்பலத்தின் சம்பந்தமாக ஒரு விஷயம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். பிரிட்டன், ஜெர்மனி கையில் சிக்குவது நடக்காத காரியம்; ஒருகால் அப்படிச் சிக்கினாலும், அதனுடைய பிரம்மாண்டமான கப்பற்படை சரணாகதியடையாமல், நேராக அமெரிக்காவுக்குச் சென்று அங்குள்ள கடற்படை ஸ்தலங்களிலிருந்து போரைத் தொடர்ந்து நடத்தும். பிரிட்டனிடமிருந்து கிடைத்த முக்கிய ஸ்தலங்களை இப்போது அமெரிக்கா பலப்படுத்திக்கொண்டு வருகிறது. இதல்லாமல், கிரீன்லாந்து பிரதேசத்தில், கப்பற்படைக்கும், விமானப்படைக்கும் தங்குமிடங்கள் ஏற்படுத்துவதற்காக, அமெரிக்கா டென்மார்க்குடன் ஒப்பந்தம் செய்துகொண்டது. இதன் மூலம், அமெரிக்காவிலிருந்து, பிரிட்டன் வரைக்கும், கப்பற் சங்கிலிகளும், விமானச் சங்கிலிகளும், தொடர்ச்சியாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அட்லாண்டிக் யுத்தத்தில், கிரீன்லாந்து ஒரு முக்கியமான பாகத்தில் இருக்கிறது. செப்டெம்பரிலிருந்து ஏப்ரல் வரையில் பனிக் கட்டியால் உறைந்திருந்தாலும், வெய்யிற் காலத்தில், கிரீன்லாந்து ஆகாய விமானங்களுக்குத் தங்குமிடமாகப் பயன்படும்.

### மிஸ்டர் சர்ச்சிலின் நம்பிக்கை.

ஆனால், இந்த சமயத்தில், அமெரிக்காவிலிருந்து அனுப்பப்படும் 'சப்ளை' கப்பல்களைப் பாதுகாக்கத் துணைக்கப்பல்கள் அல்லது "கான்வாய்" மிக அவசியமாக வேண்டியிருக்கிறது. அமெரிக்காவின் அரசாங்கத் தலைவர்கள் இதற்குத் தங்களுடைய ஆதரவைக் கொடுத்திருக்கிறார்கள். கர்னல் நாக்சும், மிஸ்டர் கார்டெல் ஹல்லும் "கான்வாய்" உதவியை அமெரிக்கா கட்டாயம் செய்யத்தான் வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். பிரசிடெண்டு ரூஸ்வெல்டு இந்த அபிப்பிராயத்தை அமுலுக்குக் கொண்டுவருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரிட்டிஷ் முதன் மந்திரி, மிஸ்டர் சர்ச்சில், சென்ற சனிக்கிழமை 'ரேடியோ'வில் பேசியபோது, அமெரிக்காவின் உதவியை மிகவும் பாராட்டிக் கூறியிருக்கிறார். அமெரிக்காவின் பேருதவி, பகைவர்களுடைய அதிக்கிரமத்தினால், கடலில் முழுகடிக்கப்படுவதற்கு அமெரிக்கா இடங்கொடுக்காதென்று தான் நம்புவதாக மிஸ்டர் சர்ச்சில் கூறினார்.

# வெடிகுண்டு தாக்கின இடத்தில் சமூகத் தொண்டு.

## ஒரு பெண்மணியின் அநுபவங்கள்.

### சிநேகிதிக்கு எழுதிய கடிதம்.

[இங்கிலாந்திலுள்ள மக்கள், ஆண், பெண், குழந்தைகள் எல்லோரும், ஜெர்மன் விமானத் தாக்குதல்களைப்பொருட்படுத்தாமல், தைரியத்துடன் சகித்துக்கொண்டு வருகிறார்கள். இந்த சகிக்கும் தன்மையை யுத்தத்தில் ஈடுபடாத நாட்டு மக்கள், நேரில் பார்த்து, பாராட்டிப் புகழ்ந்திருக்கிறார்கள். எல்லா மக்களுக்கும் பொதுவாக நேர்ந்த கஷ்டங்களைப்பற்றியும், அதனால் ஏற்பட்ட, சமுதாய ஒற்றுமை, சமூகத்தொண்டு, ஒருவருக் கொருவர் உதவி செய்யும் தன்மை, இவைகளைப் பற்றியும், இங்கிலாந்திலிருக்கும் ஒரு ஆங்கிலப் பெண்மணி எழுதிய கடிதத்தில் பல விவரங்கள் காணப்படுகின்றன. அந்த அம்மையார் ஒரு ஆங்கில ஐ.சி.எஸ். உத்தியோகஸ்தருடைய மனைவி. லண்டனிலிருந்து அவர் தன்னுடைய சிநேகிதிக்கு எழுதிய கடிதம் பின்வருமாறு:—]

"இங்கே நடக்கின்ற எல்லா விஷயங்களைப்பற்றியும் உனக்குச் சொல்ல விரும்புகிறேன். ஆனால் எந்த விஷயத்தை முதலில் சொல்ல ஆரம்பிப்பது? 'ரேடியோ' மூலம், இங்கே நடப்பவைகளைப்பற்றி உனக்குத் தெரிந்திருக்கலாம். 'ரேடியோ' வில் பல விஷயங்களைச் சொல்லுகிறார்கள்; ஆனால் எல்லா விஷயங்களையும் சொல்லுவதில்லை. நடக்கிற சம்பவங்களைப்பற்றி உண்மையான விவரங்கள் 'ரேடியோ' மூலம் சொல்லப்படுகிறது. எந்த விஷயங்கள் 'ரேடியோ' வில் சொல்லப்படவில்லையோ, அவைகள் நமது பகைவர்களுக்கு உபயோகப்படும்படியானவையாகும். 'ரேடியோ' வில் இங்கே உண்டாக்கப்படும் நஷ்டங்களையும், சேதங்களையும், மறைப்பதுமில்லை, குறைப்பதுமில்லை, ஏமாற்றுவதற்காக மாறுபடுத்திக் கூறுவதுமில்லை. அதைப்பற்றி நான் உனக்கு உறுதியாகக் கூறுவேன்.

"தனிப்பட்ட மனிதர்கள் இந்தக் கஷ்டங்களுக்கிடையில் எப்படிப்பட்ட வாழ்க்கையை நடத்திவருகின்றார்கள், இந்தக் கஷ்டங்கள் எங்களை எப்படி பாதிக்கிறது, இதுபோன்ற விஷயங்கள் 'ரேடியோ' வில் சொல்லப்படுவதில்லை. லண்டனில் நான்கு மாதங்களாக நான் வேலை செய்துக்கொண்டு வருகிறேன். கப்பல் தங்கும் பிரதேசமாகிய 'ஈஸ்ட் எண்டு' என்ற கிழக்கு மூலையில்தான் நான் வேலை செய்வது. ஒரு விஷயம் நான் நிச்சயமாகக் கூறுவேன். திடுக்கிடும்படியான தாக்குதல்களை நாங்கள் சகித்துக்கொண்டு வருகிறோம்; எங்களைத் தோல்வியடையும்படி செய்ய யாராலும் முடியாது; எங்கள் எல்லோரையும் ஒருவர்கூட இல்லாமல் கொன்று அழித்தால்தான் தோற்கடிக்க முடியும்.

"விசித்திரமும், விநோதமுமான வாழ்க்கையை நாங்கள் நடத்திக்கொண்டு வருகிறோம். இரவில், விமான எதிர்ப்புப் பாதுகாப்புக்காக, தரைக்கடியில் கட்டப்பட்டிருக்கும் மறைவிடங்களிலாவது, அல்லது வீடுகளில் தரை மட்டத்திற்குக் கீழிருக்கும் அறைகளிலாவது, தூங்குகிறோம். நல்ல சாப்பாடு எப்போது கிடைக்கிறதோ அப்போது சாப்பிடுகிறோம். பகற் காலங்களில் சாதாரணமாக வேலை செய்ததைவிட அதிகமாக வேலை செய்கிறோம். சிநேகிதர்களைப் பார்க்க முடிவதில்லை. சாயங்கால வேளைகளில், வேடிக்கையாக வெளியில் போவதற்கில்லை. இருட்டானதும் கீழே போய், அடுத்த நாள் காலை வேலைக்குப் போகும் வரையில், அங்கேயே இருக்கிறோம். இது எங்களுடைய சாதாரண வாழ்க்கையாய் விட்டது.

"இரவில், ஏராளமான வெட்டுக்கிளிகள் பறப்பது போல, பகைவர்களுடைய ஆகாய விமானங்கள் பறக்கும் சப்தம் கேட்கும். தெருவில் விமான எதிர்ப்புப் பீரங்கிகள் சுடுவது காது செவிடாகும் போலிருக்கும். சுற்றுப்பக்கங்களில், வெடிகுண்டுகள் விழும் சப்தம் கேட்டுக்கொண்டேயிருக்கும். ஆனால் இவைகளெல்லாம் இப்போது எங்கள் தூக்கத்தைக் கெடுப்பதில்லை. ஏதாவது ஒரு வெடிகுண்டு எங்களுக்கு அருகாமையில் மிகுந்த சப்தத்துடன் வெடிக்கும். அப்போது தூக்கம் கலையும்; "நல்லகாலம், நாம் தப்பித்துக்கொண்டோம்" என்று கூறிக்கொண்டு, வேறொரு பக்கம் புரண்டு உடனே தூங்கிவிடுவோம். நிசப்தமான இரவும், விமான எதிர்ப்பு எச்சரிக்கை ஒலி இல்லாத இரவும், இருந்தால், அது எங்களுக்கு அசம்பாவிதமாகத்தோன்றுகிறது; மனத்தில் ஒரு விதமான பயத்தையும் உண்டாக்குகிறது. நான் ஏதோ விளையாட்டுக்கு எழுதுகிறேன் என்று நீ நினைக்கவேண்டாம். உண்மையில், நாங்கள் நினைப்பதை உனக்குக் கூறுகிறேன். அதிர்ஷ்டமிருந்தால், தப்பிப்பிழைத்து உயிர் வாழ்கிறோம். இல்லவிட்டால், வெடிகுண்டு விழுந்து, முடிவு ஏற்படுகிறது. அவ்வளவுதான்.

### ஆடைகள் கொடுத்தல்.

"லண்டனில், பழக்கமில்லாத, புதிய செவிலித் தாய்களுக்கு ('நர்சு'களுக்கு) வேலை இல்லைபோல் தோன்றுகிறது. சம்பளமில்லாமல் செவிலித்தாய் வேலை செய்வதற்கு என்னுடைய பெயரைக் கொடுத்திருந்தேன். பாப்லர் என்ற இடத்துக்குப் போகும்படி எனக்கு உத்தரவு வந்தது. கப்பற் பட்டணமாகிய அந்த இடம் மிகக்கடுமையாக வெடி குண்டுகளால் தாக்கப்பட்டது. அந்த ஊர் ஜனங்களுக்கு உடைகள் 'பட்டுவாடா' செய்வது என்ற வேலை எனக்குக் கொடுக்கப்பட்டது. அங்கே ஒரே குழப்பமாக இருந்தது. உடை வேண்டுபவர்களும், உடை வைத்துக்கொண்டு ஏமாற்றுபவர்களும், கூட்டங் கூட்டமாக முற்றுகையிட்டார்கள். உபயோகப்படுத்தப்பட்ட ஆடைகள் நூற்றுக் கணக்கான 'பார்சல்'களில் வந்து குவிகின்றன. சுத்தமான துணிகள், அழுக்குத்துணிகள், மிக அசுத்தமான துணிகள், நடனசாலை உடைகள், உள்ளாடைகள், பிரபுக்களின்

மாலை உடைகள் கிழிந்த ஷர்ட்டுகள்—இவை யெல்லாம் குவிந்து கிடந்தன. இப்படி பலவிதமான உடைகள் எதற்கும், கணக்கு வழக்கு இல்லை. சில உடைகள் அளவுக்கு மிஞ்சி அதிகமாயிருந்தன; சில உடைகள் வேண்டுபவர்களுக்குக் கொடுப்பதற்குக்கூட போதாமல் இருந்தன. பாதி நிர்வாணமாயிருந்த ஜனங்கள் எதை கொடுத்தாலும் நன்றியறிதலுடன் வாங்கிக்கொள்வார்கள் மழமழவென்று, உயர்ந்த ஆடைகளணிந்த யூதர்கள், தங்களுக்குப் புதிய ஆடைகள் கிடைக்கவில்லையென்று கூச்சலிடுவார்கள். ஏழு அல்லது எட்டு பேரடங்கிய குடும்பங்கள், ஆடை போதாமல், கூட்டங் கூட்டமாக வந்து முறையிடுவார்கள். ஆடைகளை ஒருதரம் வாங்கிய திருடர்கள் தங்களை அடையாளம் கண்டு பிடிக்கமாட்டார்களென்று நினைத்துக்கொண்டு, மறுபடியும் வந்து ஏமாற்ற முயலுவார்கள்.

"கொஞ்சங் கொஞ்சமாக, கும்பலும், கூச்சலும், குறைந்து, எல்லாம் ஒழுங்காய்விட்டன. என்னுடைய ஏற்பாட்டின் கீழ் வந்ததும், ஒவ்வொன்றுக்கும் கணக்கு வைக்க ஆரம்பித்தேன். வருகிற சாமான்களை எல்லாம் பதியவேண்டும், கொடுக்கப்படும் சாமான்களெல்லாம் கணக்கில் வரவேண்டும், என்ற திட்டம் ஏற்படுத்தினேன். பிரயோசனமில்லாத உதவியாளர்களை அனுப்பிவிட்டு, நன்றாக வேலை செய்யக்கூடியவர்களுக்குத் தகுந்த பயிற்சி செய்துவைத்தேன். இப்போது வேலை சரியாக நடந்து வருகிறது. வெடி குண்டுகள் விழுந்ததும், அவைகளால் உண்டான சேதத்தைப்பற்றிக் கவனிப்பதற்கு, நாங்கள் உடனே தயாராய்விடுகிறோம். முனிசிபல் ஹாலுக்கு வரும் ஜனங்களுக்கு ஆடைகள் கொடுக்கிறோம்; வீடு இடிந்துபோனவர்கள், புதிய இடம் கிடைக்கும்வரைக்கும் வசிக்கப்போகும் இடங்களுக்கும் ஆடைகள் அனுப்புகிறோம். பழைய ஆடைகளைச் சீர்திருத்துதல், புதிய ஆடைகள் தைத்தல், இந்த வேலையைச் சில தொண்டர் பகுதிகள் செய்கின்றன.

"பாப்லர் பட்டணத்திலுள்ள பெண்மக்களில், சமூகத்தொண்டு செய்ய ஆசை கொண்டவர்களைக் கொண்டு, அங்குள்ளவர்களுக்கு உதவிசெய்து வருகிறேன். உள்ளூரிலிருக்கும் பெண்மணிகளைச் சமூகத்தொண்டில் உற்சாகங் கொள்ளும்படி நான் செய்தது ரொம்பவும் நல்ல காரியம் என்று கூறுகிறார்கள். வெடிகுண்டுகள் விழுவதைக் கண்டு பயந்த ஒரு பெண், அந்தவிடத்தை விட்டு வேறிடத்துக்குப் போகும்படி தன் புருஷனை வேண்டிக்கொண்டாள். ஆனால் சமூகத்தொண்டில் இறங்கியபிறகு, அந்த இடத்தைவிட்டு அந்தப் பெண் போகமாட்டேன் என்று சொல்லுகிறாள்; தன்னுடைய புருஷனுக்கு சமைத்துவைத்தல், துணி துவைத்தல் முதலிய வேலைகள் செய்கிற நேரம் சமூகத்தொண்டு செய்கிறநேரத்திலிருந்து போய்விடுகிறதே என்று வருந்துகிறாள்! தன்னுடைய வாழ்க்கையின் முழு நோக்கமும் மாறிவிட்டதாக அவள் கூறுகிறாள். எனக்கடுத்தாப்போல், அவளை இரண்டாவது தலைமைஸ்தானத்தில் வைத்திருக்கிறேன்.

"அரசாங்கத்தார் செய்யும் உதவிக்குமேல், லார்டு மேயர் சகாய நிதியிலிருந்து சிறிதுபாகம் சமூகத்தொண்டிற்கு உபயோகப்படுகிறது. ஐந்து வயதுக்கு கீழ்ப்பட்ட குழந்தைகள், அரசாங்க உதவித் திட்டத்தின்கீழ் வராத கிழவர்கள், இவர்களுக்குத் தங்குமிடமும், வேலையில்லாதவர்களுக்கு வேலையும், பிரிந்துபோன குடும்பங்களுக்கு உதவியும், இரவில் 'ஏ.ஆர்.பி.' என்ற விமான எதிர்ப்புப் பாதுகாப்பு வேலையில் இருப்பவர்களுக்கு சிற்றுண்டிகளும், விமான எதிர்ப்பு ரகசியத் தங்குமிடங்களிலுள்ளவர்களுக்கு உணவளிப்பதை மேற்பார்வை பார்ப்பதும், நாங்கள் செய்துவரும் வேலைகளில் சில.

### அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கம்.

"அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கத்தார் எங்களுக்கு மிகத் தாராளமான உதவி செய்திருக்கிறார்கள். கணக்கில்லாத ஆடைகளை அனுப்பிக்கொண்டு வருகிறார்கள். பண உதவி செய்வதிலும் அவர்கள் தங்களுடைய தாராளத்தைக் காண்பித்திருக்கிறார்கள். அதைப்பற்றி ஒரு ருசிகரமான சம்பவத்தைச் சொல்ல விரும்புகிறேன். அமெரிக்க சங்கத்தைச் சேர்ந்த சிலர் பாப்லருக்கு வந்திருந்தார்கள். எதாகிலும் நன்கொடை கொடுக்கலாமா என்றும், எவ்வளவு நன்கொடை எங்களுக்கு வேண்டுமென்றும் கேட்டார்கள். நாங்கள் அதிக தைரியத்துடன் ஆயிரம் பவுன் நன்கொடை கேட்டோம். அவர்கள் சரிதான், கொடுக்கிறோம் என்றார்கள். எங்களுடைய சந்தோஷத்துக்கு அளவேயில்லை. பிறகு எங்களுக்கு ஒரு "செக்" (பாங்கியில் இவ்வளவு பணம் கொடுக்கவேண்டும் என்ற உத்தரவு) அனுப்பினார்கள். அதற்காக எங்களுடைய நன்றியறிதலைத் தெரிவித்து பதில் எழுதினோம். மறுபடியும் அவர்களிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில், அந்தச் "செக்" கைக் கொஞ்சம் கவனித்துப் பார்த்தால், 7,000 பவுனுக்கு எழுதப்பட்டிருக்கிறதென்பது தெரியவரும், என்று எழுதியிருந்தது. அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கத்தாரின் தாராளத் தன்மையைக்கண்டு அளவிலா ஆனந்தமடைந்தோம்.

### அமெரிக்காவின் ஆதரவும், உதவியும்.

"பின்பு, பிரசிடெண்டு ரூஸ்வெல்ட் அமெரிக்க சட்டசபையில் பேசிய அருமையான பேச்சைக்கேட்டோம். அதில் அமெரிக்காவின் ஆதரவும், உதவியும், பிரிட்டனுக்குப் பூரணமாக இருக்கிறதென்று கூறினார். அமெரிக்காவுக்கும், பிரிட்டன் போர் புரிகிறதென்பதையும், அமெரிக்கா அனுப்பும் சாமான்களை நாங்கள் விலைகொடுத்து வாங்க முடியாதென்றும், நாங்கள் கொடுக்கும் விலை கணக்கில்லாத மக்களுடைய உயிரும், மற்றவர்கள் படும் கஷ்டமுந்தான் என்பதை அமெரிக்கா அறிந்திருப்பது எங்களுடைய உள்ளத்துக்கு சாந்தியை அளித்திருக்கிறது. இடிந்து உடைந்த எங்களுடைய நகரங்களையும், ஊனமான எங்களுடைய உடல்களையும், நாசமாக்கப்பட்ட எங்களுடைய வாழ்க்கைகளையும், பிரிந்து வேறுபட்ட எங்களுடைய குடும்பங்களையும், அநேக வருஷங்களாக இருந்த, ஒரு வெடிகுண்டினால் சிதரடிக்கப்பட்ட, எங்களுடைய சிறு வீடுகளையும், அமெரிக்கா செய்யும் பேருதவிக்கு விலையாகக் கொடுக்கிறோம்.

### மனோநிலை உயர்ச்சி.

"இவ்வளவு கோரமான காரியங்களுக்கிடையில், உலக சாந்தியான எண்ணங்கள் மனத்தில் உதிக்கின்றன. ஆத்மாவை அழிக்கும் சோம்பல், தான் நன்றாயிருந்தால் மற்றவர்களைப்பற்றிக் கவலைகொள்ளாத மனோகர்வம், வாழ்க்கையில் லட்சியங்களைத் தவறாக மதிப்பிடும் அறியாமை, இவைகளெல்லாம் அசைக்கப்பட்டு, அழிக்கப்பட்டன. பாப்லரில் சிலர் தங்களுடைய சொத்துக்களை இழந்து வருந்துவார்கள். சொத்துக்கள் வாழ்க்கையில் அவ்வளவு முக்கியமானவையல்ல என்று அவர்களுக்கு நான் ஆறுதல் கூறுவதுண்டு. உயிரும், தேக சௌக்கியமும் இருந்தால், புதிய வீடு கட்டிக்கொள்ளலாம் என்று கூறுவேன். வெடிகுண்டுகளால் வீழ்த்தப்பட்ட வீடுகளைக் கண்டு வருந்துபவர்களுக்கு, ஒரே இடத்தில் வசிப்பதைவிட வேறிடத்துக்குப்போய், புதிய சிநேகிதர்களுடன் வாழ்வது எவ்வளவு ருசிகரமானது என்று கூறுவேன். இந்த பயங்கரமான வாழ்க்கையைவிட மிக ருசிகரமான வாழ்க்கை எது?

"பகலிலும், இரவிலும், வெடிகுண்டுகளால் தாக்கப்படுவது, தப்பித்துக்கொண்டால் வெற்றி, இல்லாவிட்டால் தியாகம், ஒரு பெரிய காரியத்துக்காகத் தியாகம்—இதுதான் எங்கள் வாழ்க்கை. தேச முழுவதும் மனோ நிலை உயர்ச்சியை அடைந்து, ஆத்மஞானம் பெற்று விளங்குகிறது. நாங்கள் எதற்கும் பயப்படுவதில்லை. நாங்கள் பெருமையுடன் இருக்கிறோம், கஷ்டப்படுவதை ஒரு சந்தோஷமாகக் கொண்டாடுகிறோம். எங்களுக்காக யாரும் இரக்கம் கொள்ளவேண்டிய அவசியமில்லை. எங்களுக்காகப் பயப்படவேண்டியதுமில்லை. எங்களுக்குப் பயமென்பதே கிடையாது. இம்மாதிரியாகக் கஷ்டப்படும்படியான பாக்கியத்தைப் பெறுதவர்களைப் பார்த்து இரக்கப்படவேண்டுமே ஒழிய எங்களைப் பார்த்து இரக்கப்படவேண்டியதில்லை.

(இதன் தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்கவும்.)

குறிப்பு.—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவுசெய்து ஒன்றின்பின் ஒன்றாக விடாமல் சேர்த்துவரவும்.
[சென்னை இன்பர்மேஷன் டைரெக்டர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

MADRAS: PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.